**O.S. 55 /2018 , 05.08.2021, 11.20 am**

**வா.சா.1: வெங்கட்டாசலம் த/பெ.பெருமாள் நாயுடு**

**முதல் விசாரணை:-**

திருப்பத்தூர் மாவட்டம், வாணியம்பாடி வட்டம், திம்மாம்பேட்டை அஞ்சல், புல்லூார் மதுரா, மோட்டூர் கிராமத்தில் வசிக்கும் இந்து விவசாயம் மற்றும் பயிர் ஜீவனம் பெருமாள் நாயுடு குமாரர் சுமார் 43 வயதுள்ள வெங்கட்டாசலம் ஆகிய நான் பிரமாணமாய் கூறுவது யாதெனில்,

சத்தியமாக சொல்கிறேன். என்னுடைய பிரமாண பத்திரிக்கையில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியும். அதிலுள்ள கையொப்பம் என்னுடையது தான். 22.11.1993 தேதியிட்ட கிரைய பத்திரத்தின் சான்றிட்ட நகல் வா.சா.1 ஆகும். 19.09.1994 தேதியிட்ட டி.வி ராஜவேலு என்பவரின் கிரைய பத்திரத்தின் அசல் வா.சா.ஆ.2 ஆகும். டி.வி ராஜவேலு பெயரில் உள்ள பட்டா பாஸ்புக் வா.சா.ஆ.3 ஆகும். 31.10.2003 தேதியட்ட வாதியன் தகப்பனார் பெயரிலான கிரைய பத்திரத்தின் அசல் வா.சா.ஆ.4ஆகும். வாதியின் தகப்பனார் பெயரில் உள்ள பட்டா பாஸ்புக் வா.சா.ஆ.5 ஆகும். பெருமாள் என்பவரின் இறப்பு சான்று அசல் வா.சா.ஆ.6 ஆகும். வாதியின் தாயார் இறப்பு சான்றிதழ் அசல் வா.சா.ஆ.7 ஆகும்.வழக்கு சொத்தின் வில்லங்கசான்றிதழ் வா.சா.ஆ.8 ஆகும்.04.01.2021 தேதியிட்ட 1ம் பிரதிவாதி 2ம் பிரதிவாதிக்கு எழுதி கொடுத்த விடுதலை பத்திரம் வா.சா.ஆ.9 ஆகும். வாரிசுச்சான்றிதழ் நகல் வா.சா.ஆ.10 ஆகும். தாவாப்படி தீர்பாகும்படி கேட்டுக்கொள்கிறேன்.

பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.